**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள்நலன்– 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான 25 இல்லங்களுக்கு 2013–2014 ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் உணவூட்டு மானியம் ரூ.650/– ஆக உயர்த்தி வழங்கியது– ஆணை வெளியிடப்பட்டது– திருத்தம் –வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.61

நாள்:29–09–2014
ஜய, புரட்டாசி 13,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.14, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 13–03–2014.
2. நிதித் துறையின் அ.சா.எண்.48906/நிதி(சந)/2014, நாள் 8.9.14.

–––––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கென ஏற்கனவே செயல்பட்டு வரும் 7 இல்லங்களுடன் 14 வயதிற்கு மேற்பட்ட தொழிற்பயிற்சியுடன் கூடிய ஆண்களுக்கான 10 இல்லங்களும் மற்றும் பெண்களுக்கான தனியாக தொழிற்பயிற்சியுடன் கூடிய 10 இல்லங்களும் என மொத்தம் 27 இல்லங்களில் திண்டுக்கல் மாவட்டம் இனிய உதயம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் அனுகிரகா ஆகிய இரண்டு தொண்டு நிறுவனங்கள் நீங்கலாக, மீதமுள்ள 25 தொண்டு நிறுவனங்களை, 2013–14 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்த, ஆறு மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களுக்கான செலவினத் தொகை ரூ.59,20,800/– மற்றும் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான 10 இல்லங்கள் மற்றும் பெண்களுக்கான தனியாக தொழிற்பயிற்சியுடன் கூடிய 9 இல்லங்கள், என 19 இல்லங்களுக்கு செலவினத் தொகையாக ரூ.1,83,69,200/– என மொத்தம் ரூ.2,42,90,000/– (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து இரண்டு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும் ) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், இவ்வில்லங்களில் தங்கி உள்ளோருக்கு வழங்கப்படும் உணவூட்டு மானியத்தை ரூ.450/–லிருந்து ரூ.650/– ஆக உயர்த்தி வழங்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், உணவூட்டு செலவினத்தை உயர்த்துவதால் ஏற்படும் செலவினம் ரூ.24,00,000/– மட்டும் ஒரு 'புது துணைப் பணி' குறித்த செலவினமாகும் என அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. எனினும், அரசு ஆணையில் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண் வழங்கப்படாமையால் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைக்கு பின்வருமாறு திருத்தம் வெளியிடப்படுகிறது:–

## <u>திருத்தம்</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் பத்தி 7–க்குப் பதிலாக பின்வரும் பத்தி வாசிக்கப்பட வேண்டும்:–

இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.52078/நிதி(சந)/2014, நாள் 25.09.2014ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.1169 (ஆயிரத்து நூற்று அறுபத்தொன்பது)

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

**<u>நகல்:–</u>**
நிதித்(சந/ வ.செ.பொ.I/வ.செ.பொ.II) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.